*கவனிக்க.-2021.05.28 ஆந் திகதிய 2230 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2231 - 2021 ජූනි මස 04 වැනි සිකුරාදා - 2021.06.04

*2231 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1232 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, யூன் மாதம் 25ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, யூன் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1229-B 82236-5,403 (2021/ 06)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான “புதிய சேர்வாளர்கள்” ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

*அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.*

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (III) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (vIII) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xIII) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொரட்டுவை

*திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு*

**தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் முழுநேர பயிற்சி நெறிக்கான அனுமதி - 2021**

கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடைய ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்தும் 2021 ஆம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தேவையான ஆகக்குறைந்த தகைமைகள் :**

01. (அ) **வயது** : 2021.03.31 ஆந் திகதியன்று 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வி** : க.பொ.த.(சா./த.) பரீட்சையில் தமிழ் அல்லது சிங்களம் (போதனாமொழி), கணிதம் உட்பட 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

இலண்டன் சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலமொழி, கணிதம் உட்பட 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**விசேட திறமை-**

மின்சாரவியல்/இலத்திரனியல்/இயந்திரவியல் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு தேசிய/மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினை பெற்ற சான்றிதழுடன் (ஆ) கல்வித்தகைமையினை இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) தேசிய தொழில் பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகார சபையில் 03 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கான பயிற்சியினைப் பெறுவோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் அல்லர்.

02. **பயிற்சி போதனைகள்.**- சிங்களத்தில் எல்லா பாடநெறிகளும், மோட்டார் இயந்திரவியல் பாடநெறி மாத்திரம் தமிழிலும் நடத்தப்படும். சிங்கள மொழியறிவுள்ள தமிழ் மாணவர்கள் மற்றைய பாடநெறிகளையும் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். (ஆ) இல் இலண்டன் சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தமிழ் அல்லது சிங்கள மொழிமூலம் பயிற்சி பெறும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

03. **நுழைவுத்தேர்வு.**- தேவையான தகைமைகளையுடைய, கீழே 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணங்கள் செலுத்திய விண்ணப்பதாரிகள் மட்டும் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(அ) பரீட்சைக்கான மொழி : தமிழ்/சிங்களம்

(ஆ) பரீட்சை நிலையம் : அனுமதிக்கான எழுத்துமூல பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம், வவுனியா ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும். (போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாத நிலையங்களில் பரீட்சை இரத்துச் செய்யப்பட்டு அவர் விரும்பும் வேறு பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர்.)

**எழுத்துமூலப் பரீட்சை.**- கணிதம், அடிப்படைத் தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு, ஆங்கிலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட 02 வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

04. **பரீட்சைக் கட்டணம்.**- விண்ணப்பதாரிகள் ரூபா 500.00 ஐ ஏதாவதொரு இலங்கை வங்கிக் கிளையில், கீழேயுள்ள கணக்கிற்கு வைப்பிலிட்டு அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**கணக்கு**: கணக்காளர், இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம், மொரட்டுவைக் கிளை, கணக்கு இலக்கம் : 681490.

அழிந்துபோன, மாற்றங்கள் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதை விசேடமாக கவனத்திற்கொள்க.

05. **ஆரம்பத் தேர்வு முறை**.- எழுத்துமூலப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் மத்தியிலிருந்து திறமை அடிப்படையில் தகைமையுடையவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின்தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டுள்ளது. (இவ் வெட்டுப்புள்ளி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடைமுறைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.)

06. **இறுதித் தேர்வு முறை**.- நேர்முகப்பரீட்சைக்கு முன்பதாக செயல்முறைப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். செயல்முறைப் பரீட்சையின் 40% உம், நேர்முகப் பரீட்சையின் 60% உம், புள்ளிகளாக வழங்கப்படும். விளையாட்டு போன்ற சிறப்புத் தகைமைகள் இருந்தால் அவைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவோர் வைத்திய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதில் சித்தியடையாதோர் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

07. **பயிற்சி நெறி**

| இல. | பயிற்சிநெறி | பயிற்சிக் காலம் |
|---|---|---|
| 01 | மோட்டார் இயந்திரவியல் | 04 ஆண்டுகள் |
| 02 | மில்றைற்/வார்ப்பியல் | 04 ஆண்டுகள் |
| 03 | காற்று பதனமாக்கல்/குளிரூட்டல் | 03 1/2 ஆண்டுகள் |
| 04 | வலு மின்சாரவியல் | 03 1/2 ஆண்டுகள் |
| 05 | ஆயுத இயந்திரவியல் | 03 1/2 ஆண்டுகள் |
| 06 | மெக்காற்றோனிக் (கைத்தொழில்) | 03 1/2 ஆண்டுகள் |
| 07 | வாகன மின்சாரவியல் | 03 ஆண்டுகள் |
| 08 | டீசல் இயந்திரவியல் | 03 ஆண்டுகள் |
| 09 | வாகன காற்று பதனமாக்கல்/குளிரூட்டல் | 03 ஆண்டுகள் |
| 10 | உருக்கியிணைத்தல் | 03 ஆண்டுகள் |
| 11 | வாகன உடல் திருத்துதலும் வர்ணம் தீட்டுதலும் | 03 ஆண்டுகள் |

முதலாம் வருடம் நடத்தப்படும் அடிப்படைப் பயிற்சியின் முடிவில் நடைபெறும் தொழிற்றுறை தேர்வுப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளையும், ஆற்றல்களையும் அடிப்படையாகக் கொண்டே உமக்கான தொழிற்றுறை தெரிவு செய்யப்படும்.

8. **பிணை முறி கைச்சாத்திடல்**: 04, 03 1/2, 03 வருட பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவோர் தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையுடன் பயிற்சியினை திருப்திகரமாகப் பூர்த்தி செய்வேனென உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

9. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப A 4 அளவில் விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு, அதனுடன்

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
(ஆ) கல்விச் சான்றிதழ்
(இ) இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "முழுநேர பயிற்சிநெறிக்கு பயிலுநர்களைச் சேர்த்தல் 2021" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளல்**

* www.cgtti.lk என்னும் இணையத் தளத்திலிருந்து.
* நிறுவகத்திற்கு சமுகமளிப்பதன் மூலம்.
* பெயர், விலாசமிடப்பட்ட முத்திரையுடனான கடிதவுறையினை நிறுவகத்திற்கு அனுப்புவதன் மூலம்.

10. **விண்ணப்ப முடிவுத் திகதி**.- விண்ணப்பங்கள் 2021.07.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக "முகாமையாளர் - மனித வளமும் நிர்வாகமும்" அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. **பரீட்சை அனுமதிப்பத்திரம்**.- தகைமையுள்ள பரீட்சார்த்திகளுக்கு 2021.09.10 ஆந் திகதியளவில் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பிவைக்கப்படும். மேற்படி பத்திரம் கிடைக்கப்பெறாதோர் இத்தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்புகொள்க.

முகாமையாளர் -
மனித வளமும் நிர்வாகமும்.

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்,
இல. 582, காலி வீதி, கல்கிசை
(அங்குலானை சந்திக்கு அருகில்),
தொலைபேசி - 011-2605625.

**இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொரட்டுவை**

**தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் முழுநேர பயிற்சி நெறி அனுமதிக்கான விண்ணப்பம் - 2021**

| அலுவலக உபயோகத்திற்காக | Q | DQ | பரீட்சை இல.: | | | | | நேர்முகப் பரீட்சை இல. : | | பயிலுநர் இல. : | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

* ஆங்கிலத்தில் நிரப்பும்போது கெப்பிட்டல் எழுத்தினை உபயோகிக்கவும்.
* கீழே (* ) காட்டப்பட்டுள்ள இடத்தில் சரியான கூட்டினுள் ( ✓ ) என்னும் அடையாளத்தினை இடவும்.

01. (அ) முழுப்பெயர் : (தமிழில்)

(ஆ) முழுப்பெயர்: (ஆங்கிலத்தில்)

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கிலத்தில்)

02. (அ) தபால் முகவரி: (தமிழில்)

(ஆ) தபால் முகவரி : (ஆங்கிலத்தில்)

(இ) மாவட்டம் : (ஈ) பிரதேச செயலக பிரிவு: (உ) மாகாணம்:

(ஊ) மின்னஞ்சல் முகவரி: (எ) தொலைபேசி இலக்கம் :

| | |
|---|---|
| கையடக்க : | |
| வதிவிடம் : | |

03. (அ) பிறந்த திகதி : (ஆ) 2021.03.31 ஆந் திகதியன்று வயது:

| வருடங்கள் | | மாதங்கள் | | நாட்கள் | |
|---|---|---|---|---|---|

(இ) தேசிய ஆளடையாள அட்டை இல. : (ஈ) ஆண்/பெண் (*) :

| ஆண் | | பெண் | |
|---|---|---|---|

04. கல்வித்தகைமை க. பொ. த. (சா. த.) (முதலாம் அமர்வு)

| சுட்டெண் | | வருடம் | |
|---|---|---|---|
| பாடம் | | தரம் | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

இரண்டாவது அமர்வில் (விசேட திறமைக்கான சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

| சுட்டெண் | | வருடம் | |
|---|---|---|---|
| பாடம் | | தரம் | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

05. விசேட திறமை அடிப்படையில் விண்ணப்பித்தால், இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் மாவட்ட/ தேசிய மட்டத்தில் சான்றிதழ் வழங்கப்பட்ட வருடமும் துறையும் :

வருடம் : ______ துறை : ______

06. (அ) பிரவேசப் பரீட்சை எழுத விரும்பும் மொழி (*)

| சிங்களம் | | தமிழ் | |
|---|---|---|---|

(ஆ) பிரவேசப் பரீட்சை எழுத விரும்பும் பரீட்சை நிலையம் (*)

| கொழும்பு | கண்டி | காலி | பதுளை | அநுராதபுரம் | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | | | | | |

07. (அ) கட்டணம் செலுத்திய இலங்கை வங்கிக் கிளை ______ (அ) திகதி ☐☐ ☐☐ ☐☐☐☐

என்னால் வழங்கப்பட்ட மேற்கூறிய விபரங்கள் அனைத்தும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விபரங்களில் ஏதாவது பொய்யானவையென தெரிவின் முன்போ அல்லது பின்போ கண்டுபிடிக்கப்பட்டால் தகைமையற்றவனாக கருதப்படவோ அல்லது பயிற்சியிலிருந்து நீக்கப்படுவதற்கோ ஏதுவாவேன் என்பதையும் அறிவேன்.

______ ☐☐☐☐ ☐☐ ☐☐

விண்ணப்பதாரியின் கையொப்பம் திகதி

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (அ) வங்கியின் பற்றுச்சீட்டு | ஆம் | | இல்லை | | | |
| (ஆ) கல்விச் சான்றிதழின் பிரதி | ஆம் | | இல்லை | | | |
| (இ) பிறப்புச் சான்றிதழின் பிரதி | ஆம் | | இல்லை | | | |
| (ஈ) இல. 05 இற்குரிய, சான்றிதழின் பிரதி | ஆம் | | இல்லை | | பொருத்தமற்றது | |

(உ) வயதெல்லை

| -16 | | | OK | 22+ | |
|---|---|---|---|---|---|

(ஊ) நுளைவுத்தேர்வுக்குத் தகுதி பெற்றுள்ளாரா?

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

(எ)பரீட்சித்தவர்

| |
|---|

*6-26*

---

**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின்உத்தரவின் பிரகாரம்**

இலங்கை கல்வி நிர்வாக சேவை **III** ஆம் வகுப்புக்கு உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான (மட்டுப்படுத்தப்பட்ட) போட்டிப் பரீட்சை –2020/2021

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஊடாக இலங்கை கல்வி நிர்வாக சேவை III ஆம் வகுப்பில் காணப்படுகின்ற பொது மற்றும் விஷேட சேவை பதவியணியினர் வெற்றிடங்கள் 442 ஐ நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் உத்தரவின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய விண்ணப்பப்படிவத்தினை கீழ்க்குறிப்பிடப்பட்ட திகதி அல்லது அதற்கு முன்னர் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு' என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக் கொள்வதற்கான (மட்டுப்படுத்தப்பட்ட) போட்டிப் பரீட்சை –2020/2021' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயரை சிங்கள மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழிமூலவிண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைக் கோரும் இறுதித் திகதி : 2021.07.30

விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்புபட்ட ஆவணங்கள் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதித்துக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவங்களைத் தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**01. சேவைக்கு ஆட்சேர்க்கும் ஒழுங்கு விதிமுறைகள் :**

(அ) நியமனம் வழங்கும்பொருட்டு தெரிவு செய்வதற்கு எழுத்துப் பரீட்சையில் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகளிடையே தகைமை அடைந்தோர் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக்குறைந்து 40% புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர்களிடையே வாய்மொழித் தேர்வுக்கு அழைக்கப்படுவது,பொது ஊழியர் எண்ணிக்கையின் கீழ் அல்லது விசேட சேவை எண்ணிக்கையின் ஒவ்வொரு பாடங்களின் கீழ் அல்லது நிலவும் வெற்றிடத்திற்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கைக்குச் சமமான இரண்டு மடங்கினர் மட்டுமே ஆவர்.விண்ணப்பதாரிகள் எழுத்துப்பரீட்சைகளில் பெற்ற புள்ளிகள் வாய்மொழிப் பரீட்சைக் குழாமுக்கு வழங்கப்படமாட்டாது. வாய்மொழிப் பரீட்சைக்காக புள்ளி வழங்கப்படும் முறைமைகள் இந்த அறிவித்தலில் இலக்கம் 10.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மொழிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்த புள்ளிகளின் திறமை ஒழுங்கின் பிரகாரம் III ஆம் வகுப்பின் வெற்றிடங்கள் நிரப்பப்படும். ஏதாவது வெற்றிடத்தின் எண்ணிக்கையோ அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்புதல் அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின்அதிகாரத்திற்குட்பட்டதாகும்.

(ஆ) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தீவின் எந்தவொரு மாகாணத்திலும் சேவை புரிவதற்காகக் கட்டுப்பட்டுள்ளதோடு, அதன்படி தீவின் எந்தவொரு மாகாணத்திலும் நிலவும் பின்வரும் வெற்றிடங்களுக்காக இடநிலைப்படுத்தப்படும்.

***அட்டவணை 01:*** இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் தரத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கான(2020/2021) வெற்றிடங்களின் எண்ணிக்கை

| பாடம் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பொதுவான பதவியணி | 45 |
| விசேட பதவியணி எண்ணிக்கை | |
| சிங்களம் | 39 |
| தமிழ் | 21 |
| ஆங்கிலம் | 25 |
| கணிதம் | 20 |
| விஞ்ஞானம் | 29 |
| வணிகவியல் | 04 |
| தகவல் தொழில்நுட்பம் | 21 |
| உடற்கல்வி | 34 |
| கிறிஸ்தவ / கத்தோலிக்க சமயம் | 03 |
| இந்து சமயம் | 05 |
| மாணவர் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் | 24 |
| விசேட கல்வி | 11 |
| திட்டமிடல் | 52 |
| ஆரம்பக் கல்வி | 29 |
| வரலாறு | 29 |
| அழகியற்கல்வி | 24 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 09 |
| உயிரியல் தொழில்நுட்பம் | 18 |
| மொத்தம் | 442 |

**02. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

I. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1928/28 மற்றும் 2015.08.21 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அச் சேவை பிரமாணக் குறிப்பிற்கு செய்யப்பட்ட திருத்தங்கள் மற்றும் இதன் பின்னர் செய்யப்படும் திருத்தங்களுக்கும் அரசசேவை நியமனத்தைக்கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வகுப்பின் IIIஆம் தரத்திற்கு நியமனம் செய்யப்படுவார்கள். பரீட்சைக்குத் தோற்றும் மொழியே ஆட்சேர்ப்புச் செய்யப்படும் மொழியாகும்.

II. இந்த நியமனம் நிரந்தரமானது. விதவைகள் தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியைச் செலுத்துதல் வேண்டும். இப் பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்குத் தாங்கள் கட்டுப்பட வேண்டும்.

III. இந்த பதவிகளுக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் ஓராண்டு (01) பதில்கடமை புரிதலுக்கு உட்படுத்தப்படுவர்.

IV. *மொழித் தேர்ச்சி :-*

| *மொழி* | *பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய தேர்ச்சி* |
|---|---|
| அரச கரும மொழி | அரசகரும மொழி அல்லாத மொழியொன்றின் மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர் ஒருவர் பதவியில் நிரந்தரப்படுத்துவதற்கு முன்னர் அரச கரும மொழியொன்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| ஏனைய அரசகரும மொழி | அரச பொது நிருவாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதனுடன் இணைந்த சுற்றறிக்கை விதிமுறைகளுக்கு அமைவாக உரிய மட்டத்தில் தேர்ச்சி பெறறிருக்க வேண்டும். |
| இணைப்பு மொழி | ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட தினத்திலிருந்து மூன்று (03) வருடத்திற்குள் இணைப்பு மொழி (ஆங்கில மொழி) தொடர்பான தேர்ச்சியைப் பெற்றிக்க வேண்டும்.<br>இணைப்பு மொழிக்குரிய பரீட்சித்தல் தொடர்பான விபரங்கள் இ.க.நி.சே. சேவை பிரமாணக் குறிப்பின் 7ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. |

V. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் அரச சேவை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களும், நிபந்தனைகளும் இப்பதவிக்கு உரித்தாகும்.

VI. இச் சேவைக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் சேவையின் தேவைக்கு அமைய மத்திய அரசின் அல்லது மாகாண அரச சேவையின் பதவிகளுக்கு நியமனம் செய்யப்படுவர்.

**03. சம்பள அளவுத்திட்டம் :**

2016.02.25 ஆந் திகதிய இலக்கம் 03/2016 கொண்ட அரச பொது நிருவாக சுற்றறிக்கைற்கு அமைய இப்பதவி, ரூபா. 47,615 - 10 x 1335 - 8 x 1630 - 17 x 2,170 - ரூபா 110,895 (SL-01-2016) மாதாந்த சம்பள அளவுத் திட்டத்துக்கு உரித்தாகும்.

**04. தகைமைகள் :**

(அ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மத்திய அரசாங்க/ மாகாண அரசாங்க சேவைக்குரிய ஆசிரிய சேவையின் உத்தியோகத்தர்கள், இலங்கை அதிபர் சேவையின் உத்தியோகத்தர்கள், ஆசிரிய ஆலோசகர் சேவையின் உத்தியோகத்தர்கள், இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்கள் மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு உதவி வழங்கப்படுகின்ற பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் பதவி நிரந்தரப்படுத்தப்பட்ட ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பிரிவெனாச்சாரியர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுகின்றார்.

**குறிப்பு 01:**
இவ் அங்கீகரிக்கப்பட்ட பிரிவெனாக்கள் மற்றும் உதவி பெறும் பாடசாலை ஆசிரியர்கள் அரச சேவையாளர்களாகக் கவனத்தில் கொள்ளப்படுவதற்கு உரிமையில்லை.

**4.1 கல்வித் தகைமைகள் :**

(அ) பொதுச்சேவை பதவியணியினருக்காக

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

II. தேசிய போதனாவியல் டிப்ளோமா சான்றிதழ் அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்

(ஆ) விஷேட சேவை பதவியணியினருக்காக

I. உரிய பாடத்துக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக மொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் பட்டம்பெற்றிருத்தல். (குறிப்பு 02 மற்றும் 03 ஐப் பார்க்க)

அல்லது

II. உரிய பாடத்தில் ஆசிரியர் பயற்சிச் சான்றிதழ் அல்லது உரிய பாடத்தில் தேசிய போதனாவியல் டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

III. தொழில்நுட்பவியல் விடயப்பரப்பின் கீழ் பொறியியல் தொழில்நுட்பவியல் பாடத்துக்கு இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட உயர் தேசிய டிப்ளோமா (HNDE) அல்லது மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற மூன்று ஆண்டுகளைக் கொண்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) அல்லது கட்டுநாயக்கா பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தினால்

வழங்கப்படும் நான்கு வருட பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய டிப்ளோமா (NDES) அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா(DT) அல்லது இலங்கை மூன்றாம்நிலை மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப தகைமை மட்டம் 6 இற்குரிய உயர் டிப்ளோமா (NVQ Level 06) பெற்றிருத்தல்.

(விசேட சேவை எண்ணிக்கையினருக்குரிய பாடப்பரப்பு அட்டவணை 03 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.)

**குறிப்பு 02 :**

விண்ணப்பிக்கும் பாடத்துறை பிரதான பாடங்களில் ஒன்றாக பட்டத்தில் கற்றிருப்பது கட்டாயமாவதோடு,அப் பாடம் மொத்தப் பாட அலகுகளின் (ஒருசில) எண்ணிக்கையில் மூன்றிலொரு (1/3) பங்கேனும் உள்ளடங்கும் வகையில் கற்றிருக்கும் பாடங்களாக இருத்தல் வேண்டும். மேலும் விண்ணப்பிக்கும் பாடம், பட்டத்தின் மொத்தப் பாட அலகுகளின் (ஒருசில) எண்ணிக்கையில் மூன்றிலொரு (1/3) பங்கு உள்ளடங்குவதாக உரிய பல்கலைக்கழகத்தின்பதிவாளரினால் / வெளிநாட்டுப் பல்கலைக்கழகமாயின் அப் பல்கலைக்கழகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதோடு, அவ் உறுதிப்படுத்தல் சான்றிதழ்/ கடிதம் சாதாரண நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**குறிப்பு 03 :**

இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டிருப்பது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களினால் பெறப்பட்ட சான்றிதழ்களின் அடிப்படையிலாயின், அப் பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் என பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் பெறப்பட்ட, உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் சாதாரண நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**05. அனுபவம் :**

(அ) *பொதுச் சேவை பதவியணியினருக்காக*

I. பட்டப் படிப்புத் தகைமையுடனாயின்,அத் தகைமையைப் பெற்ற பிறகு குறைந்த பட்சம் ஐந்து (5) ஆண்டுகள் தொடர் கற்பித்தல் அனுபவம் இருத்தல்,

அல்லது

II. ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமா தகைமையுடனாயின், அத் தகைமையைப் பெற்ற பிறகு குறைந்த பட்சம் ஏழு ஆண்டுகள் (7) தொடர் கற்பித்தல் அனுபவம் இருத்தல்.

அல்லது

III. ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமாவுடன் பட்டப் படிப்புத் தகைமை பூர்த்தி செய்யப்பட்டிருக்குமிடத்து, ஆசிரியர் பயிற்சி அல்லது போதனாவியல் டிப்ளோமா தகைமை பெற்ற பின்னர், ஐந்து ஆண்டுகள் (5) தொடர் கற்பித்தல் அனுபவம் இருத்தல்.

அல்லது

IV. இலங்கை அதிபர் சேவை அல்லது ஆசிரிய ஆலோசகர் சேவை அல்லது இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தரொருவராக, மேற்குறிப்பிட்ட பதவியில் ஐந்து (05) ஆண்டுகள் தொடர் மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு 04 :**

இங்கு இலக்கம் (IV) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தரொருவராக,அப்பதவியில் ஐந்து (05) வருடங்களுக்கும் குறைவான சேவைக் காலம் இருக்குமிடத்து, மேற்கூறிய (I) (II) மற்றும் (III) தகைமைகளில் அச் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

(ஆ) *விஷேட பதவியணியினருக்காக*

I. குறித்த பாடத்திற்குரிய பட்டப்படிப்புத் தகைமை இருக்குமாயின், அத் தகைமையைப் பெற்றபின், குறைந்தபட்சம் ஐந்து (5) ஆண்டுகள் உரிய பாடத்தில் தொடர்ச்சியான கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

அல்லது

II. குறித்த பாடத்திற்குரிய ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமாவுடன் பட்டப்படிப்புத் தகைமையும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின், ஆசிரியர் பயிற்சி அல்லது போதனாவியல் டிப்ளோமா தகைமை பெற்ற பிறகு, ஐந்து (5) ஆண்டுகள் உரிய பாடத்தில் தொடர்ச்சியான கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

அல்லது

III. குறித்த பாடத்திற்குரிய ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமாவுடன் கூடியதாயின், அத் தகைமையைப் பெற்ற பிறகு குறைந்த பட்சம் ஏழு (7) ஆண்டுகள் உரிய பாடத்தில் தொடர்ச்சியான கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

அல்லது

IV. விஷேட கல்வி/ தொழில்நுட்பம்/ உடற்கல்வி ஆகிய பாடத்துறைகளுக்கு குறித்துரைக்கப்பட்ட பாடத்துக்குரிய ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமாவுடன் கூடியதாயின், குறைந்த பட்சம் கடந்த அண்மித்த ஐந்து (05) ஆண்டுகளில் குறித்த பாடத்தில் தொடர்ச்சியான கற்பித்தல் அனுபவத்துடன் ஏழு (07) ஆண்டுகள் கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**06. தேகாரோக்கியம் :**

சகல விண்ணப்பதாரிகளும் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றல் மற்றும் பதவிக்குரிய பணியினை மேற் கொள்ளத் தேவையான உடல், உள பொருத்தப்பாட்டினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**07. ஏனைய தகைமைகள் :**

I. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் எந்தவொரு விண்ணப்பதாரியும் மூன்று (03) தடவைக்கு மேலே தோற்றுவதற்கு அனுமதியில்லை என்பதுடன், திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை இரண்டிலும் ஒன்றாகச் சேர்த்துப் பார்க்குமிடத்து மொத்தமாக ஐந்து (05) தடவைக்கு மேல் எந்தவொரு பரீட்சார்த்தியும் தோற்றுவதற்கு அனுமதி இல்லை.

II. இவ் வர்த்தமாணி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி,இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான சகல தகைமைகளும் விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அனைத்து வகைகளிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

III. சகல விண்ணப்பதாரிகளும் ஐந்து (05) வருடங்களுக்கு குறையாத தொடர் மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
(விண்ணப்பிக்கும் திகதியன்று சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்குரிய பதில் கடமை நிறைவேற்றும் காலப் பகுதிக்குள் உள்ள உத்தியோகத்தரொருவரது முன்னைய பதவியில் சேவை நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்)

V. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல 01/2020 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

**08. வயதெல்லை :**

விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் தினத்தன்று 53 வயதை விடத் தாண்டாது இருத்தல் வேண்டும். அதன்படி, 1968.07.30 ஆந் திகதி அல்லது அதன்பின்னர் பிறந்த திகதி கொண்டோருக்கு மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமை உண்டு.

**09. விண்ணப்பிக்கும் முறை :**

I. சேவையின் III ஆம் தரத்தின் பதவியணி எண்ணிக்கை, பொதுவான பதவியணி எண்ணிக்கை மற்றும் விசேட பதிவியணி எண்ணிக்கையைக் கொண்டதாகும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பொதுவான பதவியணி

எண்ணிக்கைக்கு மேலதிகமாக விசேட பதவியணி எண்ணிக்கையின் கீழ் ஒரு பாடத்திற்கு மாத்திரம் அல்லது விசேட பதவியணி எண்ணிக்கையின் கீழ் மாத்திரம் விண்ணப்பிப்பதாயின்,விசேட பதவியணி எண்ணிக்கையின் கீழ் இரண்டு (02) பாடத்திற்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

II. ஒரு விண்ணப்பதாரி பொதுச்சேவை பதவியணி எண்ணிக்கை மற்றும் விஷேட சேவை எண்ணிக்கையின் ஒரு பாடத்தின் கீழ் அல்லது விசேட சேவை எண்ணிக்கையின் இரண்டு பாடங்களின் கீழ் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகைமை பெற்றிருக்கும் பட்சத்தில், அவ் விண்ணப்பதாரர் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பதவியணி எண்ணிக்கை / பாடம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவினால் தீர்மானிக்கப்படுவதுடன், அங்கு விண்ணப்பதாரரினால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விருப்பத்தெரிவின் முன்னுரிமை ஒழுங்கு கவனத்திற்கொள்ளப்படும்.

III. விஷேட சேவையாளர் எண்ணிக்கையின் பாடப்பரப்பும் அவற்றுக்குரிய குறியீட்டு இலக்கங்கங்களும் கீழே தரப்பட் டுள்ளன. தாம் விண்ணப்பிக்கும் பாடப்பரப்பையும் அதற்குரிய குறியீட்டு இலக்கத்தையும் விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு, விருப்பத்தெரிவு எவ்வித காரணங்களுக்காகவும் பின்னர் மாற்றம் செய்யப்படுவதற்கு இடம் வழங்கப்படமாட்டாது.

*அட்டவணை 02 : ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பாடங்களும் அவற்றுக்குரிய இலக்கங்களும்*

| பாடப்பரப்பு | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பொதுவான பதவியணி எண்ணிக்கை | 11 |
| விசேட பதவியணி எண்ணிக்கை | |
| சிங்களம் | 21 |
| தமிழ் | 22 |
| ஆங்கிலம் | 23 |
| கணிதம் | 24 |
| விஞ்ஞானம் | 25 |
| வணிகவியல் | 26 |
| தகவல் தொழில்நுட்பம் | 27 |
| உடற்கல்வி | 28 |
| கிறிஸ்தவ / கத்தோலிக்க சமயம் | 30 |
| இந்து சமயம் | 31 |
| மாணவர் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் | 33 |
| விசேட கல்வி | 37 |
| திட்டமிடல் | 38 |
| ஆரம்பக் கல்வி | 39 |
| வரலாறு | 40 |
| அழகியற்கல்வி | 41 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 43 |
| உயிரியல் தொழில்நுட்பம் | 44 |

அட்டவணை 03 : விசேட சேவை எண்ணிக்கையினருக்குரிய பாடப்பரப்பு குறிப்பிடப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்பின் "ஆ" உப அட்டவணை.

| *பாடப்பரப்பு* | *ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள்* |
|---|---|
| 1. சிங்களம்<br>2. தமிழ்<br>3. ஆங்கிலம்<br>4. கணிதம்<br>5. விஞ்ஞானம் | (I) குறித்த பாடத்திற்குரிய பட்டம் அல்லது பட்டத்தின் ஒரு பகுதியாக குறித்த பாடத்தைப் பிரதான பாடமாகப் பின்பற்றியிருத்தல் மற்றும் அது மொத்த பாட அலகுகளின் எண்ணிக்கையில் 1/3 பகுதியாவது விண்ணப்பிக்கும் பாடத்திற்கு உரியதாகப்பின்பற்றியிருத்தல். |

| பாடப்பரப்பு | ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் |
|---|---|
| 6. வணிகவியல்<br>7. தகவல் தொழில்நுட்பம்<br>8. உடற்கல்வி<br>9. கிறிஸ்தவ/கத்தோலிக்க சமயம்<br>10. இந்து சமயம்<br>11. மாணவர் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் | (II) குறிப்பிட்ட பாடங்களுக்கு உரிய ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது குறிப்பிட்ட பாடங்களுக்கு உரிய போதனாவியல் டிப்ளோமா பெற்றிருத்தல்.<br><br>(நேர்முகப் பரீட்சையின் போது சான்றிதழ்களின் ஊடாக உறுதிப்படுத்துதல் வேண்டும்.) |
| 12. அழகியற்கல்வி | குறிப்பிட்ட பாடத்திற்கு உரிய பட்டமானது சித்திரம், நடனம், கீழைத்தேய சங்கீதம், மேலைத்தேய சங்கீதம், நாடகமும் அரங்கியலும் பாடத்துறையிலான பட்டமாகும். |
| 13. தொழில்நுட்பம் | |
| (i) உயிரியல் தொழில்நுட்பம் | விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டம் அல்லது விவசாய விஞ்ஞானம், மனையியல், நெசவுக் கைத்தொழில், வாழ்க்கைத் தேர்ச்சி தொடர்பான ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமா பெற்றிருத்தல். |
| (ii) பொறியியல் தொழில்நுட்பம் | பொறியியல் தொழில்நுட்ப பாடத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பப் பட்டம் அல்லது இயந்திரவியல் கட்டுமானம் மின்சாரம் மற்றும் இலத்திரனியல் போன்ற துறைகளில் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பொறியியல் பட்டம் அல்லது இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட தேசிய டிப்ளோமா (HNDE) அல்லது மொரட்டுவ பல்கலைக்கழகம் வழங்குகின்ற மூன்று ஆண்டுகளைக் கொண்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) அல்லது கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய டிப்ளோமா(NDES) அல்லது இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா (DT) அல்லது இலங்கை மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப தகைமை மட்டம் 6க்குரிய உயர் டிப்ளோமா (NVQ Level 6)பெற்றிருத்தல் |
| 14. விசேட கல்வி | (i) விசேட கல்வி தொடர்பாக கல்விமாணி, கல்வி முதுமாணி அல்லது கலைமுதுமாணிப் பட்டம் பெற்றிருத்தல்<br>(ii) விசேட கல்வி தொடர்பாக அரசினர் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்<br>(iii) தேசிய கல்வியியற் கல்லூரியில் விசேட கல்வி தொடர்பாகப் போதனாவியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் |
| 15. திட்டமிடல் | கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளிலிருந்து குறைந்தது ஒரு பாடத் துறையையாவது பிரதான பாடத்துறையாகப் பின்பற்றி அதில் சித்தியெய்தி, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் எந்தவொரு பட்டத்தையும் பெற்றிருத்தல்.<br><br>பாடத்துறைகள்,<br>● புள்ளிவிபரவியல்<br>● கணித பாடம்<br>● முகாமைத்துவம்<br>● கல்வியியல், மூலதத்துவங்கள் மற்றும் ஒப்பீட்டுக்கல்வி<br>● சமூகவியல்<br>● உயிரியல்<br>● பௌதீகவியல்<br>● பொருளியல் |

| *பாடப்பரப்பு* | *ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள்* |
|---|---|
| 16. ஆரம்பக்கல்வி | (i) ஆரம்பக்கல்வி தொடர்பாக கல்விமாணி, கல்விமுதுமாணி அல்லது கலைமுதுமாணிப் பட்டம் பெற்றிருத்தல்<br>(ii) ஆரம்பக்கல்வி தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசினர் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்<br>(iii) தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பக்கல்வி தொடர்பாகப் போதனாவியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் |
| 17. வரலாறு | வரலாற்றைப் பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல். |

**குறிப்பு 05:**
திட்டமிடல் பாடத்துறைக்காக முன்வைக்கப்படும் பட்டத் தகைமை பின்வரும் பாடத்துறையின் கீழ்க் கொண்டுவரப்படுமாயின், அப் பாடங்கள் தொடர்பாகப் பின்வரும் அடிப்படையில் கற்பித்தல் அனுபவம் கவனத்திற் கொள்ளப்படும்.

| *பாடத்துறை* | *கற்பித்தல் அனுபவத்தை உறுதிப்படுத்த வேண்டிய பாடங்கள்* |
|---|---|
| முகாமைத்துவம் | வணிகக்கல்வி / வணிகக் கற்கைகள்<br>பொருளியல்<br>வணிகம் மற்றும் கணக்கீட்டு கற்கை/ முகாமைத்துவ கணக்கீடு/ கணக்கீடு<br>தொழில் முனைவோர் கற்கைகள்<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்<br>வணிக புள்ளிவிபரம் |
| கல்வி அறிவியல் | புவியியல்<br>விஞ்ஞானம்<br>கணிதம்<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்<br>பொருளியல்<br>வணிகம் மற்றும் கணக்கீட்டு கற்கை<br>தொழில் முனைவோர் கற்கைகள் |
| சமூக விஞ்ஞானம் | புவியியல்<br>குடியியல் கல்வி |

**குறிப்பு 06 :**
மாணவர் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் பாடத்துறையில் கற்பித்தல் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக குறிப்பிட்ட வருடங்களுக்குள் பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்பட்ட மாணவர் ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் முன்வைக்கப்படல் வேண்டும்.

**10. ஆட்சேர்ப்பு முறை :**

*10.1* **எழுத்துப் பரீட்சை**

எழுத்துப்பரீட்சை அட்டவணை 04இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மூன்று (03) வினாப்பத்திரங்களைக் கொண்டது.

*10.1.1பாடத்திட்டம்*

*அட்டவணை 04 :* எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள்

| | *பாடங்கள்* | *காலம்* | *உச்ச புள்ளி அளவு* | *சித்தி பெறுவதற்கு பெறப்படவேண்டிய குறைந்த புள்ளி அளவு* |
|---|---|---|---|---|
| 01 | கிரகித்தல் | 1 மணி 30 நிமிடம் | 100 | 40 |
| 02 | நுண்ணறிவுப் பரீட்சையும் உளச்சார்பும் | 1 மணி | 100 | 40 |
| 03 | கல்வி நிருவாகமும் முகாமைத்துவமும் | 1 மணி | 100 | 40 |

அட்டவணை 05 : பாடத்திட்டம்

| | வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|---|
| I | கிரகித்தல் | பரீட்சார்த்திகளிடம் விடயங்களைக் கிரகித்துக்கொள்ளும் ஆற்றல், தொடர்பாடல் திறன், சாராம்சப்படுத்துதல், விவரித்தல், பகுப்பாய்வு ஆற்றல் மற்றும் படைப்பாற்றலை அளவிடுவதற்காகத் தயாரிக்கப்பட்ட புறவய வினாக்களைக் கொண்டமையும். |
| II | நுண்ணறிவுப் பரீட்சையும் உளச்சார்பும் | இவ் வினாப் பத்திரம் பல்தேர்வு மற்றும் குறுவிடை வழங்கல் வகை வினாக்கள் 50 ஐக் கொண்டமையும்.<br><br><u>நுண்ணறிவு</u><br>பரீட்சார்த்திகளிடம் தர்க்கிக்கும் ஆற்றல், மாற்றீடு செய்தல், பொருட்கோடல், தொடர்பு காணல், மொழிபெயர்ப்பு, பிரச்சினை தீர்க்கும் இயலுமை, காரணகாரிய தொடர்புகளைப் புரிந்துகொள்ளல், எதிர்வுகூறல், தகவல்களை ஒழுங்கமைத்தல், வடிவங்களை இனங்காணல், ஆலோசனைகளைப் பின்பற்றுதல் முதலான திறன்களை அளவிடுதல்.<br><br><u>உளச்சார்பு</u><br>அடிப்படைசார், இலக்கஞ்சார் மற்றும் வடிவஞ்சார் சூழமைவில் முன்வைக்கப்படும், பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான காரணங்களை இனங்காணல், முடிவுகளுக்கு வருதல், தீர்மானம் மேற்கொள்ளல், தொடர்பாடல் திறன் முதலியவற்றில் பரீட்சார்த்தியின் இயலுமைகளை அளவிடுவதற்குத் தயார் செய்யப்படும். |
| III | கல்வி நிருவாகமும் முகாமைத்துவமும் | ஆரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் கல்விக் கொள்கைகள், பாடசாலை மேற்பார்வை, மனித மற்றும் பௌதீகவள முகாமைத்துவம், கல்வி நவீனமயமாக்கல், பிரச்சினை இனங்காணலும் பிரச்சினை தீர்த்தலும், தீர்மானமெடுக்கும் ஆற்றல் போன்ற திறன்களைப் பரீட்சார்த்திகளிடம் மதிப்பீடு செய்வதற்காகத் தயாரிக்கப்படும் புறவய வினாக்களைக் கொண்டமையும். |

10.1.2 இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

**10.2 வாய்மொழிப் பரீட்சை (25 புள்ளிகள்)**

I. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவினால் விண்ணப்பதாரிகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாக அறிவு, தர்க்க வலிமை, பிரச்சினை தீர்த்தல், தொடர்பாடல் திறன் மற்றும் ஆளுமையை பரிசீலிப்பதற்காக பின்வரும் புள்ளித்திட்ட அடிப்படையில் வாய்மொழிப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

அட்டவணை 06 : வாய்மொழிப் பரீட்சைக்காகப் புள்ளி வழங்குவதற்கான நியதிகள்

| பாடப்பரப்பு | உச்ச புள்ளிகள் |
|---|---|
| 1. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பான அறிவு | 07 |
| 2. தர்க்கவலிமையும் பிரச்சினை தீர்த்தலும் | 07 |
| 3. தொடர்பாடல் திறன் | 07 |
| 4. ஆளுமை | 04 |
| மொத்தம் | 25 |

II. வாய்மொழிப் பரீட்சைக்கு முன்னர், ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் பூர்த்திச் செய்யப்பட்டுள்ளமையைப் பரீட்சிப்பதற்காகச் சாதாரண நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படுவதோடு அங்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

III. எழுத்துப் பரீட்சையின் பின்னர், ஒவ்வொரு பாடத்தின் கீழ் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு தகைமை பெறும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, உரிய வெற்றிட எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கையாயின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் சாதாரண நேர்முகப் பரீட்சைக்காக அவ்வாறு தகைமை பெற்றோர் மாத்திரமே அழைக்கப்படுவர்.

IV. சாதாரண நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் பெயர்ப்பட்டியல் கல்வியமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட்டும்.

V. சாதாரண நேர்முகப் பரீட்சை மற்றும் வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்பட்டு உரிய நியமனங்கள் வழங்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், மேலும் வெற்றிடங்கள் காணப்படுமாயின், இரண்டாம் சுற்றாக உரிய முறையில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு மிகுதி வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது எடுக்காது விடல் தொடர்பாகக் கல்வி அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

*10.3* **பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல்**

இவ் அறிவித்தலின் 01 (அ) பந்தியின் படி எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகிய இரண்டிற்கும் தோற்றி, அதில் அதிகூடிய சித்தியைப் பெறுவோரில் தகைமை ஒழுங்கின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் சபை செயலாளருக்கு வழங்கப்படும். அதன்படி, உரிய நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர், கல்விச் சேவைகள் சபையின் அறிவித்தலின் படி பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேற்றினைக் குறிப்பிட்டு அனுப்புவதற்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk என்ற இணையத் தளத்தினூடாகவும் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**11. பரீட்சை நிபந்தனைகள் :**

I. பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்தியொருவருக்கு விருப்பமான ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுகின்ற பரீட்சை மொழிமூலத்தினை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

II. பரீட்சைக் கட்டணம் 1,200 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் செலுத்தி, விண்ணப்பதாரியின் பெயரிலேயே பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டிவிடவும். இப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கும்.

III. பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது என்பதோடு, வேறு பரீட்சைக்காக மாற்றம் செய்வதற்கும் முடியாது.

IV. இப்பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

V. அனுமதிப்பத்திரமின்றி பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க அனுமதியளிக்கப்பட மாட்டாது என்பதோடு, பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை ஒப்படைத்தல் கட்டாயமானதாகும்.

VI. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளார் எனக் கருத முடியாது.

VII. விண்ணப்பப்படிவம் 22 x 29 சென்ரி மீற்றர் அளவில் ஏ4 கடதாசிகளில் தயாரிக்கப்பட வேண்டும். 01 - 05 வரையான தலைப்புக்கள் முதற் பக்கத்திலும் 06 தொடக்கம் உள்ள தலைப்புக்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் பக்கத்திற்கும் வருமாறு தயாரிக்கப்பட வேண்டியதோடு, அதற்குரிய தகவல்கள் தமது கையெழுத்தினால் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

VIII. உரிய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம் வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமளிக்கும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு ஏற்புடையதா என விண்ணப்பதாரியினால் விசாரிக்கப்படல் வேண்டும்.

IX. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாறான மற்றும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

X. பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அதுபற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நடைபெறும் திகதிக்கு குறைந்தது ஐந்து (05) தினங்களுக்கு முன்னராவது அனுமதிப் பத்திரம் கிடைக்காத பரீட்சார்த்தி இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது தொடர்பாகப் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது தங்கள் வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, விண்ணப்பப்படிவம் பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளியில் உள்ள பிரதேசமாயின் அனுமதிப்பத்திர பிரதியொன்றை பெற்றுக்கொள்ளக்கூடிய தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது வேண்டுதல் கடிதத்தை 011-2784232 எனும் தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பிவைத்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாகும்.

XI. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் பரீட்சையை ஒத்தி வைத்தல் அல்லது இரத்துச்செய்யும் உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குரியதாகும்.

XII. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்பட நேரிடும். மேலும் நாட்டில் நிலவும் தனிமைப்படுத்தல் சட்டதிட்டங்களுக்கும் பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும்.

XIII. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் தாங்கள் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறுகின்ற விதத்தில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதாவதொன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

அத்துடன் பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் செல்லல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்கமுயாது. மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்ததில் இருந்து பரீட்சை நிறைவுற்று அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு பரீட்சார்த்தியை அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

XIV. பரீட்சார்த்தியொருவருக்கு தகுதி இல்லை என வெளிப்படின், பரீட்சைக்கு முன்னரோ பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்திலோ, பரீட்சைக்குப் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தி என்ற அந்தஸ்தினை இரத்துச்செய்ய முடியும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயம் உண்மைக்குப் புறம்பானது என பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரியவரின் அல்லது ஏதேனும் ஒரு முக்கிய விடயத்தை மறைத்திருப்பின் சேவையில் இருந்து இடைநிறுத்துவதற்கும்/ முன்னர் வகித்த பதவிக்கு மீளவும் அனுப்பப்படுவதற்கும்/ சேவையில் இறக்கம் செய்யப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

XV. அரச சேவையில்/ மாகாண அரச சேவையில்/அரச சேவைக்காக முறையாக விடுவிக்கப்பட்டுள்ள அரசின் தொண்டர் இராணுவப் படையினர் அல்லது தொண்டர் இராணுவத் துணைப்படைச் சேவையில் ஈடுபட்டிருக்கும் அலுவலர் களினால் தமது திணைக்களம்/ நிறுவனப் பொறுப்பாளர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் சகல விண்ணப்பதாரிகளும் அவர்களது கையொப்பத்தை தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

XVI. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவுக்குரியது.

12. சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலின் மொழிபெயர்ப்பில் வேறுபாடுகளிருப்பின் அச்சமயத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலையே சரியானதாகக் கருதப்படும்.

பேராசிரியர் கே. கபில சீ. கே. பெரேரா
செயலாளர்,

கல்வி அமைச்சு.
2021.05.28.

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் தரத்துக்கு சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2020/2021**

Limited Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Education Administrative Service – 2020/2021

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

(பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமே ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் மொழிமூலமாகும்)

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் "ஊழியர் எண்ணிக்கை" :

பொது ஊழியர் எண்ணிக்கை மாத்திரம் - 1
விசேட ஊழியர் எண்ணிக்கை மாத்திரம் - 2
பொது மற்றும் விசேட ஊழியர் எண்ணிக்கை ஆகிய இரண்டிற்கும் - 3

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக விண்ணப்பிக்கும் பாடத்துறை மற்றும் குறியீட்டு இலக்கம் தங்கள் விருப்பின் முன்னுரிமை ஒழுங்கின் அடிப்படையில் கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடவும்.

| முன்னுரிமை ஒழுங்கு | பதவியணி தொகையின் பெயர் | பாடத்துறையின் பெயர் | குறியீட்டு இல |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |

1.0 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ........................................

1.2 முதலெழுத்துக்களை இறுதியாகக் குறிப்பிட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ........................................
(உதாரணம் : SILVA, G.A.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) : ........................................

02. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)........................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்)........................................

2.3 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)........................................

2.4 அலுவலக முகவரி (சிங்களத்தில் / தமிழில்)........................................

2.5 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
........................................

03. 3.1 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம் - தொ.பே
(இருப்பின் மாத்திரம்) - தொ.ந

3.2 அலுவலக தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம் - தொ.பே

- தொ.ந

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.3 மின்னஞ்சல் முகவரி ……………………………………………………………………..

04. ஆண் / பெண் தன்மை :

ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

05. தேசிய ஆள் அடையாள அட்டை இல.

06. 6.1 விவாக நிலை :

திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

6.2 பிறந்த திகதி :
ஆண்டு: மாதம் : திகதி :

6.3 2021.07.30 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள்: மாதங்கள்: நாட்கள்:

7.0 இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக உரிய கல்வி / வேறு தகைமைகள்

7.1 பட்டம் /வேறு தகைமைகள்: ………………………………………………………...

7.2 உரிய பல்கலைக்கழகம் / நிறுவனம் : ………………………………………………...

7.3 பல்கலைக்கழகத்தில் / நிறுவனத்தில் மாணவர் பதிவு இலக்கம் : …………………...

7.4 பட்டம் /உரிய தகைமை பெற்றுக்கொண்ட மொழி ஊடகம் : ……………………….

7.5 பட்டம் /தகைமைகளுக்கு உரிய பாடங்கள்: ……………………………………...

7.6 அப் பட்டம் /தகைமை பெற்றுக்கொள்ளப்பட்ட (செல்லுபடியாகும்) திகதி:………...

7.7 வகுப்புச் சித்தி (வகுப்பு கிடைக்கப்பெற்றிருப்பின் மாத்திரம்) : ………………………………

8.0 8.1 கல்வித்துறைக்கு உரித்தான முதலில் அரச சேவையில் இணைந்துகொண்ட திகதி : ……

8.2 தற்போதைய சேவை : ……………………………………………………………….

8.3. தற்போதைய சேவை நிலையம் : ……………………………………………………

8.4 விண்ணப்பப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று சேவைக்காலம்

வருடம் : ………. மாதம் : …………….. திகதி :…………….

9.0 9.1 ஆசிரிய பயிற்சி பெற்ற ஆண்டு : …………………………………………………..

9.2 தேசிய கல்வியியற் கல்லுரி/ஆசிரிய கலாசாலையின் பெயர் : …………………….

9.3 பயிற்சிச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :……………………………………..

9.4 பயிற்சிக்குரிய பாடத்துறை : ……………………………………………………………

9.5 பயிற்சி பெற்ற விடயத்திற்கு அமைவாக ஆசிரிய நியமனம் பெற்ற திகதி :………..

9.6 அந் நியமன திகதியிலிருந்து விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி வரை சேவைக்காலம் :

வருடங்கள் : …… மாதங்கள் : ……… நாட்கள் : ………

10.0 நீங்கள் தற்போது வகிக்கும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளீரா? ...........................

11.0 இதற்கு முன்னர் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு அல்லது திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய தடவைகளின் எண்ணிக்கை மற்றும் ஆண்டுகள்

| பரீட்சை | ஆண்டு | தடவைகள் |
|---|---|---|
| மட்டுப்படுத்தப்பட்ட | | |
| திறந்த | | |

12.0 பரீட்சைக் கட்டணம் :

பரீட்சைக் கட்டணம் ரூபா 1200/- ஐச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும்
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்துக்கொள்ளவும்)

13.0 மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் மனசாட்சியின்படி உண்மையெனவும், சரியானதெனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய ...............ஆம் இலக்க ............... ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் இணைக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சைச் சட்டதிட்டத்திற்கு அமைவாக செயற்படுவதற்கும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயற்படுவதற்கும், இப்பரீட்சை சட்டதிட்டத்திற்கு அமைவாக நான் தகைமையற்றவன் எனக் கருதப்படுமிடத்து பரீட்சைக்கு முன் அல்லது நடைபெறும்போது எனது விண்ணப்பத்தினை இரத்துச் செய்வதற்கு அல்லது எனக்கு எதிராக எடுக்கப்படும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகின்றேன். நான் இப்பதவியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் தகுதியற்றவன் என கருதப்படுமிடத்து சேவை இறக்கம் செய்வதற்கும் இணங்குகிறேன்.

........................ ...................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

14.0 வலயக் கல்விப் பணிப்பாளர்,

இவ்விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் வண./திரு./திருமதி/செல்வி ....................இக் கல்லூரியில் ........................ஆக சேவையாற்றுகின்றார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

........................ ...................................
திகதி அதிபரின் கையொப்பம்
(பதவி முத்திரை)

15.0 பரீட்சை ஆணையாளர் நாயகம்,

இவ்விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கின்ற வண./திரு./திருமதி/செல்வி ........................இவ் வலயத்தின் ..............................................கல்லூரியில்/ நிறுவனத்தில்............................. ஆக சேவையாற்றுகின்றார் என்றும்,2021........... ஆம் திகதிக்கு ஐந்து (05) வருடங்கள் தொடர் மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்துடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படுத்தப்படவில்லை என்றும், இலக்கம் 01 இல் இருந்து 11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அலுவலகத்திலுள்ள அவரின் சொந்தக் கோவைக்கு அமையச் சரியானது எனவும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச்செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

........................ ...................................
திகதி மாகாணக் க.செ/மாகாணக் க.ப/வலயக் க.ப/
நிறுவனத் தலைவர் (கையொப்பம் மற்றும்
பதவி முத்திரை)

## அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் உத்தரவின் பிரகாரம்

### சேவை அனுபவம் மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் IIIஆம் வகுப்புக்குச் சேர்த்துக்கொள்ளும் போட்டிப் பரீட்சை– 2020/2021

சேவை அனுபவம் மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் IIIஆம் வகுப்பின் பொது ஊழியர் எண்ணிக்கையின் பதவி வெற்றிடங்களில் காணப்படும் 67 வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைபெற்ற கீழ் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சகல தகைமைகளும் விண்ணப்பம் கோரும் இறுதித் தினமன்று பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய விண்ணப்பப்படிவத்தினை கீழ்க் குறிப்பிடப்பட்ட திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப்பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சேவை அனுபவம் மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சை –2020/2021"எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சையின் பெயரை சிங்கள மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைக் கோரும் இறுதித் திகதி : 2021.07.30

விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்புபட்ட ஆவணங்கள் தபாலில் காணாமல்போதல் அல்லது தாமதித்துக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவங்களைத் தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

01. **சேவைக்கு ஆட்சேர்க்கும் ஒழுங்கு விதிமுறைகள் :**

(அ) எழுத்து மூலப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் எழுத்து மூலப்பரீட்சையில் மற்றும் சேவை அனுபவம் ஆகிய இரு துறைகளிலும் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளை இணைத்து தகைமைத் தொடருக்கமைய சேர்த்துக் கொள்ள எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை, பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் இருக்கின்றதா எனப் பரிசீலனை செய்ததன் பின்னர் நியமனத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படுவர். இந்நியமனங்கள் அமுல்படுத்தப்படும் திகதி மற்றும் நியமிக்கப்படும் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் சபையினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடத்தை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பும் அதிகாரம் அரசாங்க சேவைஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் சபைக்கு உரியதாகும்.

(ஆ) தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படவில்லையாயின், திறமைத் தொடருக்கமைய பட்டியலில் அடுத்த விண்ணப்பதாரரின்தகைமையினைப் பரிசீலனை செய்வதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

02. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

I. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1928/28 ஆம் இலக்க மற்றும் 2015.08.21 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பின் மீது விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பில் முதலாவது மற்றும் இரண்டாவது திருத்தங்களுக்கும், அரச சேவையின் நியமனத்தை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டுத் தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் கடமை புரிவதற்கு உட்படுவர்.

II. இந்த நியமனம் நிரந்தரமானது. விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியைச் செலுத்துதல் வேண்டும். இப் பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்குத் தாங்கள் கட்டுப்பட வேண்டும்.

III. இப்பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் ஒரு (01) வருட பதில் கடமைக் காலத்திற்கு உட்படுவர்.

IV. மொழித் தேர்ச்சி

| *மொழி* | *பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய தேர்ச்சி* |
|---|---|
| அரசகரும மொழி | அரசகருமமொழி அல்லாத மொழியொன்றின் மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர் ஒருவர் பதவியில் நிரந்தரப்படுத்தப்படுவதற்கு முன்னர், அரசகரும மொழியொன்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| ஏனைய அரசகரும் மொழி | அரச பொது நிருவாக சுற்றறிக்கை18/2020 மற்றும் அதனுடன் இணைந்த சுற்றறிக்கை விதிமுறைகளுக்கு அமைவாக உரிய மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| இணைப்பு மொழி | ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட தினத்திலிருந்து மூன்று (03) வருடத்திற்குள் இணைப்பு மொழி (ஆங்கில மொழி) தொடர்பான தேர்ச்சியைப் பெற்றிக்க வேண்டும்.<br>இணைப்பு மொழிக்குரிய பரீட்சித்தல் தொடர்பான விபரங்கள் இ.க.நி.சே. சேவை/ பிரமாணக் குறிப்பின் 7ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. |

V. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள், காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் அரச சேவை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களும், நிபந்தனைகளும் அல்லது எதிர்காலத்தில் காலத்துக்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களும் இப்பதவிக்கு உரித்தாகும்.

VI. III ஆம் வகுப்பு பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் சேவையின் தேவைக்கு அமைய மத்திய அரசின் பதவிகளில் அல்லது மாகாண அரச சேவையின் பதவிகளுக்கு நியமனம் செய்யப்படுவர்.

**03. சம்பள அளவு :**

2016.02.25 ஆந் திகதிய இலக்கம் 03/2016 கொண்ட அரச பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு அமைய இப்பதவி, ரூபா 47,615 - 10 × 1,335 - 8 × 1630 - 17 × 2,170 - ரூபா 110,895 (SL-01-2016) மாதாந்த சம்பள அளவுத் திட்டத்துக்கு உரித்தாகும்.

**04. தகைமைகள் :**

கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகள் கொண்டுள்ள தற்போது சேவையில் உள்ள இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்கள் சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் நியமிக்கப்படுவதற்கான பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெறுவர்.

I. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று, இலங்கை அதிபர் சேவையின் I ஆம் தரத்தில் குறைந்த பட்சம் மூன்று வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

II. இலங்கை அதிபர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 17.4.3 பந்தியில் (ஆ) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு உள்வாங்கப்பட்டுள்ள உத்தியோகத்தராயின், அச் சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பிற்கு அமைவாக ஏனைய சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல்.

III. இலங்கை அதிபர் சேவையில் நிரந்தரப்படுத்தப்படிருத்தல்.

IV. இலங்கை அதிபர் சேவைக்குரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்/ அதிலிருந்து விடுவிக்கப்பட்டிருத்தல்.

V. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனை பெற்றவராக இல்லாதிருத்தல் வேண்டும்.

**05. தேகாரோக்கியம் :**

சகல விண்ணப்பதாரிகளும் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றல் மற்றும் பதவிக்குரிய பணியினை மேற்கொள்ளத் தேவையான உடல், உள பொருத்தப்பாட்டினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**06. வேறு தகைமைகள் :**

I. சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப்பரீட்சைக்கு மூன்று (03) தடவைகளைவிடக் கூடுதலாகத் தோற்றுவதற்கு எந்தவொரு பரீட்சாத்திக்கும் அனுமதி இல்லை என்பதுடன், மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் சேவை அனுபவம் உட்பட திறமை அடிப்படையில் சேர்த்துக் கொள்வதற்கான இரு பரீட்சைகளுக்கும் ஐந்து (05) தடவைகளை விட தோற்றுவதற்கு எந்தவொரு பரீட்சாத்திக்கும் அனுமதி இல்லை.

II. இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குச்சேர்த்துக் கொள்வதற்கான சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

07. **வயதெல்லை :**

விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் தினத்தன்று 58 வயதை விடத் தாண்டாது இருக்க வேண்டும். அதன்படி,1963.07.30ஆம் திகதி அல்லது அதன்பின்னர் பிறந்த திகதி கொண்டோருக்கு மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமை உண்டு.

08. **ஆட்சேர்ப்பு முறை :**

எழுத்துப்பரீட்சையின் பெறுபேறுகள் மற்றும் சேவை அனுபவத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

8.1 **எழுத்துமூலப் பரீட்சை**

இப் பரீட்சை அட்டவணை 01இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

8.1.1 பாடவிதானம்

அட்டவணை 01 : எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள்

| | பாடங்கள் | காலம் | உச்ச புள்ளி அளவு | சித்தி பெறுவதற்கு பெறப்படவேண்டிய குறைந்த புள்ளி அளவு |
|---|---|---|---|---|
| 01 | ஓப்பீட்டுக் கல்வி | 1 மணி | 100 | 40 |
| 02 | கல்வி நிருவாகம் தொடர்பான சம்பவக் கற்கை | 1 மணி | 100 | 40 |

அட்டவணை 02 : பாடத்திட்டம்

| | பாடங்களும் பாட இலக்கங்களும் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 01 | ஓப்பீட்டுக் கல்வி | இலங்கை கல்விக் கொள்கை, சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள், கல்விநிறுவனங்களின் பணிகள், சமீப காலக் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் சர்வதேச முன்னேற்றங்கள் தொடர்பாக ஒப்பீட்டு ரீதியில் மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்காக இவ்வினாத்தாளில் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 02 | கல்வி நிருவாகம் தொடர்பான சம்பவக் கற்கை | கல்வி நிர்வாகம் / முகாமைத்துவத் துறையில் ஏற்படக்கூடிய பல சம்பவங்களைச் சமர்ப்பித்து அச்சம்பவங்களுக்கு வரவேற்பளித்தல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் பரீட்சாத்தியின் இயலுமையினை அளவீடு செய்யும் நோக்குடன் இவ்வினாத்தாள் வழங்கப்படுகின்றது. |

8.1.2 இப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

1.2 **சேவை அனுபவம் தொடர்பாகப் புள்ளிகள் வழங்குதல்:**

I. இலங்கை அதிபர் சேவையின் Iஆம் வகுப்பில்தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தில், ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தகைமையாகக்குறிப்பிடப்பட்டுள்ள, மூன்று வருடங்கள் குறைக்கப்பட்டதன் பின்னர், அதற்கு மேலதிகமாக 1ஆம் வகுப்பில் சேவையாற்றியுள்ள சகல தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்திற்கும்வருடமொன்றுக்கு 3 புள்ளிகள் வீதம் அதிகூடியதாக 60 புள்ளிகள் சேவை அனுபவத்திற்காக வழங்கப்படும்.

II. இலங்கை அதிபர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 17.4.3 பந்தியில் (ஆ) உட்பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள நிபந்தனைகளின் படி I ஆம் வகுப்பிற்கு உள்வாங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள், அச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக உரிய சகல தகைமைகளையும் பூர்த்தி செய்வதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட காலமும், மேலதிக ஆளணி அடிப்படையில் நியமனம் பெற்றுக்கொண்டுள்ள உத்தியோகத்தர்களின் மேலதிக ஆளணி சேவைக் காலமும் இங்கு தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலமாக கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

III. முழு ஆண்டிலும் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்திற்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.

8.3 **பொதுவான நேர்முகப் பரீட்சை**

8.3.1 பொதுவான நேர்முகப் பரீட்சைக்காகப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

8.3.2 ஆட்சேர்ப்புக்குத் தேவையான தகைமைகள் மற்றும் ஆட்சேர்ப்பிற்காகப் பகிரங்கப்படுத்தப்படும் அறிவித்தலில் தகைமைகள் இருக்கின்றதா என்பது தொடர்பில் இதன் மூலம் பரிசீலனை செய்யப்படும்

I. சேவை அனுபவம் மற்றும் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் திறமைத் தொடருக்கு அமைய வெற்றிடங்களை நிரப்ப பொது எண்ணிக்கையினர் மாத்திரம் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்.

II. தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக அழைக்கப்பட்ட எவரேனும் ஒரு பரீட்சார்த்தி அல்லது பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யாதிருப்பின் ஏதேனும் ஒரு வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் தகைமைத் தொடருக்கு அமைய பட்டியலில் அடுத்த பரீட்சார்த்தியூடாக வெற்றிடம் நிரப்பப்படும்.

III. இறுதி வெற்றிடம் அல்லது இறுதி வெற்றிடங்கள் சிலவற்றுக்காக, சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் அதிக எண்ணிக்கையில் இருப்பின், அவ் வெற்றிடங்கள் அல்லது வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் சபையினால் தீர்மானம் எடுக்கப்படும்.

IV. இதன் போது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் சபையினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையூடாக பரீட்சார்த்திகளின் தகைமைகள் பரிசீலனை செய்யப்படும்.

8.4 **பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல் :**

இவ் அறிவித்தலின் 01 (அ) மற்றும் (ஆ) பந்தியின் படி எழுத்துப் பரீட்சையில் மற்றும் சேவை அனுபவத்தின் அடிப்படையில் பெறப்படும் புள்ளிகளின் மொத்த கூட்டுத்தொகையின் தகைமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் சபை செயலாளருக்கு வழங்கப்படும். அதன்படி, உரிய நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர், கல்விச் சேவைகள் சபையின் அறிவித்தலின்படி பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேற்றினைக் குறிப்பிட்டு அனுப்புவதற்கும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk என்ற இணைய தளத்தினூடாகவும் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

09. **பரீட்சை நிபந்தனைகள் :**

I. பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்தியொருவருக்கு விருப்பமான ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுகின்ற பரீட்சை மொழிமூலத்தினை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

II. பரீட்சைக் கட்டணம் 1,200 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் செலுத்தி, விண்ணப்பதாரியின் பெயரிலேயே பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டிவிடவும். இப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கும்.

III. பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது என்பதோடு, வேறு பரீட்சைக்காக மாற்றம் செய்வதற்கும் முடியாது.

IV. இப்பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

V. அனுமதிப்பத்திரமின்றி பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க அனுமதியளிக்கப்படமாட்டாது என்பதோடு,பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை ஒப்படைத்தல் கட்டாயமானதாகும்.

VI. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளார் எனக் கருத முடியாது.

VII. விண்ணப்பப்படிவம் 22x29 சென்ரி மீற்றர் அளவில் ஏ4 கடதாசிகளில் தயாரிக்கப்பட வேண்டியதுடன்01 - 05 வரையான தலைப்புக்கள் முதற் பக்கத்திலும் 06 தொடக்கம் உள்ள தலைப்புக்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் பக்கத்திற்கும் வருமாறு தயாரிக்கப்பட வேண்டியதோடு, அதற்குரிய தகவல்கள் தமது கையெழுத்தினால் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

VIII. உரிய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமளிக்கும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்புடையதா என விண்ணப்பதாரியினால் விசாரிக்கப்படல் வேண்டும்.

IX. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாறான மற்றும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

X. பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நடைபெறும் திகதிக்கு குறைந்தது ஐந்து (05) தினங்களுக்கு முன்னராவது அனுமதிப் பத்திரம் கிடைக்காத பரீட்சார்த்தி இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது தொடர்பாகப் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது தங்கள் வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, விண்ணப்பப்படிவம் பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளியில் உள்ள பிரதேசமாயின் அனுமதிப்பத்திர பிரதியொன்றை பெற்றுக்கொள்ளக்கூடிய தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது வேண்டுதல் கடிதத்தை 011-2784232 எனும் தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி வைத்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாகும்.

XI. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் பரீட்சையை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்யும் உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குரியதாகும்.

XII. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்பட நேரிடும். மேலும் நாட்டில் நிலவும் தனிமைப்படுத்தல் சட்டதிட்டங்களுக்கும் பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும்.

XIII. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் தாங்கள் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறுகின்ற விதத்தில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் செல்லல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை

உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க முடியாது. மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்ததில் இருந்து பரீட்சை நிறைவுற்று அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு பரீட்சார்த்தியை அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

XIV. பரீட்சார்த்தியொருவருக்கு தகுதி இல்லை என வெளிப்படின், பரீட்சைக்கு முன்னரோ பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்திலோ, பரீட்சைக்குப் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தி என்ற அந்தஸ்தினை இரத்துச்செய்ய முடியும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயம் உண்மைக்குப் புறம்பானது என பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரியவரின் அல்லது ஏதேனும் ஒரு முக்கிய விடயத்தை மறைத்திருப்பின் சேவையில் இருந்து இடைநிறுத்துவதற்கும்/ முன்னர் வகித்த பதவிக்கு மீளவும் அனுப்பப்படுவதற்கும்/ சேவையில் இறக்கம் செய்யப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

XV. அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில்/அரசாங்க சேவைக்காக முறையாக விடுவிக்கப்பட்டுள்ள அரசின் தொண்டர் இராணுவப் படையினர் அல்லது தொண்டர் இராணுவத் துணைப்படை சேவையில் ஈடுபட்டிருக்கும் அலுவலர்களினால் தமது திணைக்களம்/ நிறுவனப் பொறுப்பாளர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் சகல விண்ணப்பதாரிகளும் அவர்களது கையொப்பத்தை தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

XVI. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவுக்குரியது.

பேராசிரியர் கே. கபில சீ. கே. பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

2021.05.28.

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சேவை அனுபவம் மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்கு சேர்த்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சை - 2020/2021**

Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Education Administrative Service on the Basis of Service Experience and Merit – 2020/2021

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

(பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமே ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் மொழிமூலமாகும்)

1.0 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..........................................................................
..........................................................................................................................................

1.2 முதல் எழுத்துக்கள் இறுதியாக வரும்வண்ணம் முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) : ..........................................................................................................................
(உதாரணம் SILVA. G.A)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்): ...................................................................................
..........................................................................................................................................

02. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)...................................................................
..........................................................................................................................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்)........................................................................................................
........................................................................................................................................

2.3 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ........................................................................................
........................................................................................................................................

2.4 அலுவலக முகவரி (சிங்களத்தில் / தமிழில்) ...................................................................................................
........................................................................................................................................

2.5 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
........................................................................................................................................

03. 3.1 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம் - தொ.பே
(இருப்பின் மாத்திரம்) - தொ.ந

3.2 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம் - தொ.பே
- தொ.ந

3.3 மின்னஞ்சல் முகவரி...........................................................................

04. ஆண் / பெண் தன்மை :
ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

05. தேசிய ஆள் அடையாள அட்டை இல.

06. 6.1 விவாக நிலை :
திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

6.2 பிறந்த திகதி :

ஆண்டு: மாதம்: திகதி:

6.3 2021.07.30 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள்: மாதங்கள்: நாட்கள்:

07. இதற்கு முன்னர் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் சேவை அனுபவம் மற்றும் தகைமை போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய தடவைகளின் எண்ணிக்கை மற்றும் வருடங்கள்

| பரீட்சை | வருடங்கள் | தடவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மட்டுப்படுத்தப்பட்ட | | |
| சேவை அனுபவம் மற்றும் தகைமை | | |

08. சேவை விபரம் (இவ் அட்டவணையைப் பூரணப்படுத்துக)

| தொ. இல. | நியமனம் / பதவி | நியமனம் / பதவியுயர்வு / உள்வாங்கல் செய்யப்பட்ட திகதி | நியமனம் / பதவியுயர்வு / உள்வாங்கல் செய்யப்பட்ட கடித இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|
| i | அதிபர் சேவையில் முதல் நியமனம் | | |
| ii | அதிபர் சேவைக்கு உள்வாங்கல் (பொருத்தமானதாயின் மாத்திரம்) | | |
| iii | புதிய சேவை பிரமாணத்திற்கு உள்வாங்கல் | | |
| iv | அதிபர் சேவையின் முதலாம் தரத்திற்குப் பதவியுயர்த்தல் | | |
| v | நியமனம் மேலதிக ஆளனியாயின், அதிபர் சேவை முதலாம் தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்ட | | |

(இவ் அட்டவணையைப் பூரணப்படுத்துக)

| vi | தற்போதைய பதவி மற்றும் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி | தற்போதைய சேவை நிலையம் தொடர்பான தகவல்கள் | | | |
|---|---|---|---|---|---|
| | | தற்போதைய சேவை நிலையத்தின் பெயர் | தற்போதைய சேவை நிலையத்தின் முகவரி | தற்போதைய சேவை நிலையத்துக்குரிய கல்வி வலயம் | தற்போதைய சேவை நிலையத்துக்குரிய கல்வி வலயம் |
| | | | | | |

09. பங்குகொண்டுள்ள பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் :
(இவ் அட்டவணையைப் பூரணப்படுத்துக)

| தொ. இல. | பயிற்சிப் பாடநெறியின் பெயர் | பயிற்சிப் பாடநெறிக்குரிய நிறுவனம் | பயிற்சிப் பாடநெறிகள் பூரணப்படுத்தப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| i | | | |
| ii | | | |

10. வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை :

| வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை | பூரணப்படுத்தப்பட்ட / சித்தியடைந்த திகதி |
|---|---|
| முதலாவது | |
| இரண்டாவது | |

11. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 01/2020 இன் விதிமுறைகளுக்கு அமைவாக தண்டனை ஒன்றினைப் பெற்றிருப்பின் அது தொடர்பான விபரங்கள் :

(இவ் அட்டவணையைப் பூரணப்படுத்துக)

| ஆண்டு | தண்டனை தொடர்பான விபரங்கள் |
|---|---|
| | |
| | |

12. தங்களுக்கு எதிராக தற்போது ஏதேனும் ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்டிருப்பின் அது தொடர்பான தற்போதைய நிலைமைகள் : (இவ் அட்டவணையைப் பூரணப்படுத்துக)

| ஆண்டு | ஒழுக்காற்று / கணக்காய்வு செயன்முறைகள் தொடர்பான தற்போதைய நிலைமைகள் |
|---|---|
| | |
| | |
| | |

13. இலங்கை அதிபர் சேவை 1ஆம் தரத்திற்குத் தரமுயர்த்தப்பட்ட திகதியிலிருந்து சகல சம்பளப்படி உயர்வுகளும் பெற்றுக்கொண்டமை பற்றிய விபரங்கள் :

(இவ் அட்டவணையைப் பூரணப்படுத்துக)

| ஆண்டு | சம்பளப்படி உயர்வுகள் பெற்றுக்கொண்டமை பற்றிய விபரங்கள் | சம்பளப்படி உயர்வுகள் பெற்றுக் கொள்ளப்படாதவிடத்து அது பற்றிய விபரங்கள் |
|---|---|---|
| | | |
| | | |

14. இலங்கை அதிபர் சேவை 1ஆம் தரத்திற்குத் தரமுயர்த்தப்பட்ட திகதியிலிருந்து சம்பளமின்றி அல்லது அரைச்சம்பள விடுமுறைகள் பெறப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரங்கள் :
(இவ் அட்டவணையைப் பூரணப்படுத்துக)

| ஆண்டு | சம்பளமற்ற விடுமுறை காலப்பகுதி | அரைச்சம்பள விடுமுறை காலப்பகுதி |
|---|---|---|
| | ............இருந்து ......வரை | ............இருந்து ......வரை |
| | ............இருந்து ......வரை | ............இருந்து ......வரை |
| | ............இருந்து ......வரை | ............இருந்து ......வரை |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு சேவை அனுபவம் மற்றும்தகைமை அடிப்படையில் பதவியுயர்த்துவதற்காக கருத்திற்கொள்ள நான் தகைமை கொண்டவர் என்றும் இவ்விண்ணப்பப்படிவத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானது என்றும் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சையினை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டங்களுக்குக் கட்டுப்பாடுகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்று குறிப்பிடுகிறேன்.

........................ ...................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. பரீட்சை ஆணையாளர் நாயகம்,

மேற்கூறப்பட்ட 01 தொடக்கம் 14 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவை விபரங்கள் தனிப்பட்ட கோவைக்கமைய சரியானது என உறுதிப்படுத்துகிறேன். மேலும் உரிய பரீட்சைக் கட்டணமாக 1,200 ரூபா செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்துகிறேன்.

........................ ...................................
திகதி மாகாண க.செ/மாகாண க.ப/வலய க.ப/
நிறுவனத் தலைவர்,
(கையொப்பம் மற்றும் பதவிமுத்திரை)

பரீட்சைக் கட்டணம் ரூபா 1200/- ஐச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும்
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்துக்கொள்ளவும்)

6-193/2

---

## அரசாங்க சேவைகள் குழு

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018(2021)

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களங்களில் நிலவுகின்ற இலங்கை விஞ்ஞான சேவை III ஆம் தரத்துடைய 15 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி அரசாங்க சேவையில் கடமையாற்றும் தகுதியுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சையானது 2021, செத்தெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும். இவ் அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை கீழ்க் குறிப்பிடப்படும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் “பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி. 1503, கொழும்பு” என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பி வைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை- 2018 (2021)” என்று குறிப்பிடுதல் வேண்டும். மேலும், பரீட்சையின் பெயரினை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

| தொடரி லக்கம் | பதவி வெற்றிடங்களுக்குரிய திணைக்களம் | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | தொல்பொருளியல் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (இரசாயனப் பாதுகாப்பு) | 01 | 01 |
| 02 | தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 05 | 02 |
| 03 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | 04 | 03 |
| | | உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 05 | 04 |

(அ) விண்ணப்ப முடிவுத் திகதி : 2021.07.05 ஆந் திகதியாகும்.

**குறிப்பு** : விண்ணப்பப்பத்திரமோ அது தொடர்பான கடிதம் ஒன்றோ தபாலில் தொலைந்து விட்டதாகவோ அல்லது தாமதமானதாகவோ கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு பரீட்சார்த்திகளே பொறுப்பேற்க வேண்டும்.

1. **ஆட்சேர்ப்பு முறை :-**

எழுத்துப் பரீட்சையில் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில், ஒவ்வொரு வினாப் பத்திரத்திலும் 40% அல்லது அதனை விட அதிகமான புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளின் கூடிய புள்ளி ஒழுங்கிற்கு ஏற்ப ஆட்சேர்ப்பு நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படும் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் என்பதோடு, விண்ணப்பதாரிகளின் தகைமைகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் பரீட்சித்துப் பார்க்கப்படும். அவ்வந்த திணைக்களங்களுக்கு உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில், அதாவது தொல்பொருளியல் திணைக்களத்துக்குரிய பதவிக்காக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றும், தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம் மற்றும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்துக்குரிய பதவிகளுக்கு சாதாரண நேர்முகப் பரீட்சையும் நடாத்தப்படும்.

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:-**

i. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள், ஓய்வூதியத் திட்டம்/தபுதாரர், அநாதைகள், ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றுக்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும்;

ii. இப்பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் ஒரு வருட பதிற்கடமைக் காலத்துக்கு உட்படுவார்கள் என்பதோடு, மூன்றாண்டுகளுள் (03) முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்;

iii. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நியமனம் பெற்று 05 வருடங்கள் கடந்து செல்ல முன் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்;

iv. நீங்கள் விண்ணப்பித்துள்ள மொழி மூலமே, நியமனம் பெறுவதற்கு தகைமையுடைய மொழியாகக் கருதப்படும்;

v. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும் அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும் அரசினால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கை எற்பாடுகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்;

vi. இலக்கம் 1877/27 இனையுடைய 2014, ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாண மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் நிபந்தனைகளுக்கும் அதற்கமைய குறித்த பதவிகளுக்குரிய திணைக்களங்களின் உரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை நிபந்தனைகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.

*3.* **சம்பள அளவுத் திட்டம்:-**

*2016.02.25 ஆந் திகதிய இலக்கம் 03/2016 இன் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை அட்டவணை 2 இன் பிரகாரம் இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615.00 -10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895.00 (SL - 1- 2016) ஆகும்.*

*4.* **கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:-**

| *தொடரிலக்கம்* | *திணைக்களம்* | *பதவி* | *தகைமைகள்* |
|---|---|---|---|
| 01 | தொல்பொருளியல் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (இரசாயனப் பாதுகாப்பு) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட விஞ்ஞானமானி விசேட பட்டம் அல்லது சாதாரண பட்டத்தைப் பெற்றிருத்தல்.<br><br>*மற்றும்*<br><br>தொல்பொருளியல் திணைக்களத்தின் இலங்கை தொழில் நுட்ப சேவையின் 1 ஆந் தரத்தில் 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தை முழுமைப்படுத்திய உத்தியோகத்தராக இருத்தல் அல்லது இலங்கை தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்துடைய உத்தியோகத்தராக இருத்தல். |
| 02 | தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | (i) பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தாவரவியல் அல்லது உயிரியல் அல்லது விவசாய விஞ்ஞான பட்டத்துடன் குறைந்த பட்சம் 05 வருடங்கள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள MN4 சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் உத்தியோகத்தராக இருத்தல்<br><br>*அல்லது*<br><br>(ii தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்தில் சேவையாற்றும் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் 1 ஆந் தரத்தில் பதவியுயர்த்தப்பட்டு 1 ஆந் தரத்தில் குறைந்த பட்சம் 05 வருடங்கள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தராக இருத்தல்.<br><br>*அல்லது*<br><br>(iii) தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்தில் சேவையாற்றும் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் விசேட தரத்துடைய உத்தியோகத்தராக இருத்தல். |
| 03 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | (அ) இலங்கை தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்துடைய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தராக இருத்தல்.<br><br>*அல்லது*<br><br>(ஆ) இலங்கை தொழில்நுட்ப சேவையின் 1 ஆந் தரத்துடைய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தராக 10 வருடங்கள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பெற்றிருத்தல்.<br><br>*அல்லது* |

| தொடரிலக்கம் | திணைக்களம் | பதவி | தகைமைகள் |
|---|---|---|---|
| | | | (இ) விவசாயத் துறையுடன் தொடர்புடைய விஞ்ஞானமானி பட்டம் (B.Sc) மற்றும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் II ஆந் தரத்துடைய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தராக 05 வருடங்கள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல். |
| | | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | (அ) இலங்கை தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்துடைய விரிவாக்க உத்தியோகத்தராக அல்லது பண்ணை முகாமையாளராக இருத்தல்.<br>அல்லது<br>(ஆ) இலங்கை தொழில்நுட்ப சேவையின் 1 ஆந் தரத்துடைய விரிவாக்க உத்தியோகத்தராக அல்லது பண்ணை முகாமையாளராக அல்லது 10 வருடங்கள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(இ) விவசாயத் துறையுடன் தொடர்புடைய விஞ்ஞானமானி பட்டம் (B.Sc) மற்றும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆந் தரத்துடைய விரிவாக்க உத்தியோகத்தராக அல்லது பண்ணை முகாமையாளராக 05 வருடங்கள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல். |

5. **வயதெல்லை** :- ஏற்புடையதற்றது.

6. **உடற் தகைமைகள்** :-

எல்லா விண்ணப்பதாரிகளும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்று வதற்கும் எல்லா வகையிலும், உடல் உள ரீதியாக தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள்**:-

i. விண்ணப்பதாரிகள் இலங்கைக் குடிமகனாக இருத்தல் வேண்டும்;

ii. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்;

iii. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அவசியமான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

iv. அரசாங்க சேவை ஆணைக்குச் சுற்றறிக்கை 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தல்;

v. எழுத்துப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேல் தோற்றியிருக்காது இருத்தல் வேண்டும்.

8. **எழுத்துப் பரீட்சை :-**

8.1.1. இப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| வினாத்தாள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுத் தேர்வு | மணித்தியாலம் 1 | 100 | 40 |
| 2. பாடம்சார் அறிவு | மணித்தியாலம் 3 | 100 | 40 |

8.1.2 பாடத்திட்டம் :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| நுண்ணறிவுத் தேர்வு | பரீட்சார்த்தியின் தர்க்க அறிவு, பொது அறிவு மற்றும் முடிவெடுக்கும் திறன் போன்ற விடயங்களை அளவிடுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இவ்வினாப்பத்திரம் பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளிக்கும் வகையில் அமைந்த 50 வினாக்களைக் கொண்டமைந்துள்ளது.சகல வினாக்களிற்கும் விடையளித்தல் வேண்டும். இது எல்லா திணைக்களத்திற்கும் பொதுவான வினாப் பத்திரமாகும். |
| பாடம்சார் அறிவு | ஒவ்வொரு திணைக்களத்தினதும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் குறிப்பிடப்பட்டுள்ள பாடத் திட்டத்திற்கு ஏற்ப ஒவ்வொரு திணைக் களத்திற்கும் வெவ்வேறாக தயாரிக்கப்படும் வினாப்பத்திரமாகும். |

8.2 நேர்முகப் பரீட்சை:

8.2.1 சாதாரண நேர்முகப் பரீட்சை : (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.)

8.2.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

தொல் பொருளியல் திணைக்களத்திற்கு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் நடைமுறை பின்பற்றப்படுவதோடு, விவரமான புள்ளி வழங்கும் நடைமுறைநேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் சந்தர்ப்பர்த்தில் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

i. தொல்பொருளியல் திணைக்களம்

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | அதிகபட்ச புள்ளி அளவு | சித்திக்குரிய புள்ளி அளவு |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 40 | ஏற்புடையதற்றது. |
| மேலதிக சேவைக் காலத்திற்காக | 35 | |
| கணினி தேர்ச்சி | 10 | |
| மொழித் தேர்ச்சி | 10 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறன்கள் | 05 | |

9. **பரீட்சை நிபந்தனைகள்:-**

I. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தான் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பதாரிகள் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலே விடையளிக்க வேண்டும். பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. சகல பரீட்சார்த்திகளும் வினாப்பத்திரங்கள் இரண்டிற்கும் தோற்ற வேண்டும்.

II. பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்தவொரு தபாலகம்/உப தபாலகங்களில் அல்லது மாவட்ட /பிரதேச செயலகங்களுக்குச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரிலேயே பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டிவிடவும். அப்பற்றுச் சீட்டின் நிழற் பிரதியை தம் வசம் வைத்துக் கொள்வது பிரயோசனப்படும்.

III. பரீட்சைக்காக செலுத்திய பணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது அத்தோடு மற்றொரு பரீட்சைக்கு மாற்றப்படவும் மாட்டாது. பரீட்சைக் கட்டணமாக முத்திரை அல்லது காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

IV. விண்ணப்பங்கள் செ. மீ. 21 - 29 அளவுடைய A4 தாளில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதோடு, இலக்கம் 01 முதல் 3.11 வரையான தலைப்புக்கள் முதல் பக்கத்திலும், 3:12 இலிருந்து மீதமுள்ளவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பத்தை தயாரித்தல் வேண்டும் என்பதோடு, குறித்த தகவல்களை தனது கையெழுத்தில் தெளிவாகக் குறிப்பிடவும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திராத, விண்ணப்பப்படிவங்கள், பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். மேலும், விண்ணப்பதாரி உரிய விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுடையதாகும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதை விண்ணப்பதாரர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லையெனில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதனை மேலும் அறியத்தருகின்றேன்.

**குறிப்பு** : உமக்கு பயனளிக்கும் வகையில் நிவர்த்தியாக தயாரிக்கப்பட்ட பரீட்சை விண்ணப்பப்படிவம் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து (www.pubad.gov.lk) பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

போலியான தகவல்களுக்கான தண்டனை : விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தித் தன்மை இரத்துச் செய்யப்படலாம்.

V. விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதாக விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்பட மாட்டாது. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி, நிவர்த்தியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக அறிவித்து பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடாத்தப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும், தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அது குறித்து இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் வினவுதல் வேண்டும். நீங்கள் தம்வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியையும், பற்றுச்சீட்டின் நிழற் பிரதியையும் விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியில் உள்ளவராயின் மேற்படித் தகவல்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திர பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல்இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுதல் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பிவைத்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாகும்.

**குறிப்பு** : அனுமதிப்பத்திரமின்றி பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப் பத்திரத்தை மாத்திரமே வழங்க வேண்டும்.

VI. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்குரிய அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு உரிமையுண்டு.

VII. பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் திணிக்கப்படும் சட்டதிட்டங்களிற்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச்சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்.

VIII. பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

i. தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்பத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

கவனத்தில் கொள்ள வேண்டியவை:

அ. விண்ணப்பத்துடன் ஏதேனும் ஆவணங்களோ அல்லது அவற்றின் பிரதிகளையோ இணைத்தல் கூடாது.
(ஆ) ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டிருக்கும் போது குறித்த ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவங்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

10. எல்லா விண்ணப்பதாரிகளும் தமது திணைக்கள/ நிறுவனத் தலைவர்களின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்கு தோற்ற முன்னர் சகல விண்ணப்பதாரிகளும் அவர்களது கையொப்பத்தை தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2021, மே 21.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018(2021)**

Limited Competitive Examination for Recruitment to Grade Ill
of Sri Lanka Scientific Service - 2018 (2021)

01. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
(உரிய இலக்கத்தைக்கூட்டினுள்)

| | |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |
| ஆங்கிலம் | 4 |

☐

(விண்ணப்பப்படிவத்தினை நிரப்ப வேண்டியது பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலாகும்)

2. விண்ணப்பதாரியின் பதவி

| விருப்ப இலக்கம் | பதவிப் பெயர் | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| | | |

03. தனிப்பட்ட தகவல்கள்:

3.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : ........................................................................................
(உ- ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

3.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்):
Mr./Mrs./Miss : ........................................................................................
உதா :- GUNAWARDHANA, H.M.S.K.)

3.3 முழுப்பெயர் : (சிங்களத்தில்/தமிழில்): ........................................................................................

3.4 நிரந்தர முகவரி : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
(இம்முகவரிக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் அஞ்சல் செய்யப்படும்.)

3.5 நிரந்தர முகவரி: ........................................................................................
(சிங்களத்தில்! தமிழில்)

3.6 தபால் நகரம் : ........................................................................................

3.7 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.8 பெண்/ஆண்: பெண் - 1
ஆண் - 0 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

3.9 தொலைபேசி இலக்கம்: கைடக்க ☐☐☐☐☐☐☐☐☐☐

வதிவிட ☐☐☐☐☐☐☐☐☐☐

3.10 பிறந்த திகதி :
ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி : ☐☐

3.11 விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது:
வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.12 இனம்: சிங்களம் - 1, தமிழ் - 2, தமிழ் - 3, முஸ்லிம் - 4, ஏனைய - 5. ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.13 விவாகமானவர்/விவாகமாகாதது பற்றி :
விவாகமானவர் - 1, விவாகமாகாதவர் - 2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.14, மின்னஞ்சல் முகவரி : .................................................

04. தகைமைகள்:-

4.1 பட்டம் பெற்ற திகதி : ........................................................................
(இத்தகைமைகள் காணப்படுகின்றதா என்பது பற்றி அறிவித்தலின் 4 இனை தயவுடன் நன்றாக வாசிக்கவும்.)

| பரீட்சை/பட்டம் | வகுப்பு | வருடம் | பாடங்கள் | பல்கலைக்கழகம்/நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | | |

5. சேவையாற்றும் திணைக்களத்தில்/அமைச்சில்

5.1 தற்சமயம் வகிக்கும் பதவி : ..............................................................................................

5.2 தரம்: ..............................................................................................

5.3 நியமனத் திகதி: ..............................................................................................

5.4 நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி : ..............................................................................................

06. பற்றுச்சீட்டு கழராதவாறு இங்கே ஒட்டவும்.

(அப்பற்றுச்சீட்டின் நிழற் பிரதியை தம் வசம் வைத்துக் கொள்வது பிரயோசனப்படும்.)

6.1 பற்றுச்சீட்டு இலக்கம் : ..............................................................................

6.2 பணம் செலுத்திய தபால் அலுவலகம் : ..................................................................

6.3 திகதி : ..............................................................................

07. அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்றுத் தண்டனை பெற்றுள்ளீரா என்பது பற்றியும் ஏதேனும் குற்றமொன்றிற்கு எப்போதாவது அல்லது நீதிமன்றத்தில் குற்றவாளி ஆகியுள்ளீராயின், அக்குற்றம் /ஒழுக்காற்றுத் தண்டனை தொடர்பான விபரம்: ..............................................................

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப்படிவத்தில என்னால் வழங்கப்பட்ட விபரங்கள் உண்மையானவை மற்றும் சரியான தகவல்கள் என சான்றுப்படுத்துவதோடு, நேர்முகப் பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பான அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் எல்லா ஏற்பாடுகளுக்கும் நான் கட்டுப்படுவேன் என இதனால் உறுதியுரைக்கின்றேன். மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்தும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் சான்றுரைக்கின்றேன்.

......................... ......................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

09. திணைக்களத் தலைவரின் அறிக்கை:

இவ் விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................................... ஆகிய உத்தியோகத்தர் ........................................... ஆந் திகதிக்கு முன்னைய ஐந்து வருடங்களினுள்/ சேவை அல்லது திணைக்களப் பரீட்சையினை சித்தயெய்துவது நிபந்தனையாகக் காணப்படும் வேதனாதிகள் தவிர) அவரின் வேதனாதிகள் அனைத்தினையும் சம்பாதித்துள்ளார் என்றும், அக்காலத்தினுள் செய்த குற்றத்திற்கு (கண்டிப்பினைத் தவிர) எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் அவர் உட்படவில்லை எனவும், இவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் பிரத்தியேகக் கோவையிலிருந்து எடுக்கப்பட்டதாகவும், குறித்த வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுள்ளவர், எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும், இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் இந்நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என உறுதிப்படுத்துகிறேன்.

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி : ..............................................................................................

பெயர்:..............................................................................................

பதவி : ..............................................................................................

முகவரி: ..............................................................................................

(உத்தியோகபூர்வ முத்திரையின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால்செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2021**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 04.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.05.2021 |
| | | வெள்ளி | 11.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.05.2021 |
| | | வெள்ளி | 18.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.06.2021 |
| | | வெள்ளி | 25.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.06.2021 |
| **யூலை** | .. | வெள்ளி | 02.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.06.2021 |
| | | வெள்ளி | 09.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.06.2021 |
| | | வெள்ளி | 16.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.07.2021 |
| | | வியாழன் | 22.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.07.2021 |
| | | வெள்ளி | 30.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.07.2021 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 06.08.2021 | .. | நண்பகல் 12 | வியாழன் | 22.07.2021 |
| | | வெள்ளி | 13.08.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.07.2021 |
| | | வெள்ளி | 20.08.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.08.2021 |
| | | வெள்ளி | 27.08.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.08.2021 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.